**தலைப்பு 247 - இலங்கை சுங்கம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 247 - இலங்கை சுங்கத்தின் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 டிசெம்பர் 05 ஆம் திகதி இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச் சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்கப் பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல், மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

இலங்கை சுங்கத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிகர நிதி ரூபா 2085.45 மில்லியனாகும். மீளாய்வாண்டினது முடிவளவில் அதில் ரூபா 2,046.94 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சினது நிகர நிதியேற்பாட்டில் 1.85 சதவீதமான ரூபா 38.51 மில்லியன் சேமிப்புக்குள்ளாகியது. விபரம் வருமாறு.

| **செலவினம்** | **2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | | | **சேமிப்பு, நிகர நிதி ஏற்பாட்டின் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **நிகர நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| மீண்டுவருவன | 1,870.54 | 1,865.93 | 4.61 | 0.25 |
| மூலதனம் | 214.91 | 181.01 | 33.90 | 15.77 |
| மொத்தம் | 2,085.45 | 2,046.94 | 38.51 | **1.85** |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்

இலங்கை சுங்கம் 2015 ஆம் ஆண்டின்பொருட்டு 16 வருமானக் குறியீடுகளுக்கு ரூபா 615,555 மில்லியன் கூட்டுத்தொகையுடைய வருமானத்தை மதிப்பீடு செய்திருந்தது. மீளாய்வாண்டின்போது ரூபா 615,688 மில்லியன் வருமானமாகச் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாகச் சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 100.05 சதவீதமாக இருந்தது. விபரம் வருமாறு.

| வருமானக் குறியீடு | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | அதிகரிப்பு / (குறைவு), மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறான வருமானம் | அதிகரிப்பு / (குறைவு) | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 10.01.01.00 | 92,000.00 | 108,115.91 | 16,115.91 | 17.52 |
| 10.01.02.00 | 60.00 | 33.38 | 926.620 | (45.00) |
| 10.01.04.00 | 55,00.00 | 56,733.27 | 1,733.27 | 3.15 |
| 10.01.05.01 | 42,000.00 | 42,467.40 | 467.40 | 1.11 |
| 10.01.05.02 | 3,400.00 | 2,173.28 | (686.72) | (20.21) |
| 10.01.06.00 | - | - | - | - |
| 10.01.07.00 | - | 0.29 | 0.29 | - |
| 10.01.08.00 | 56,000.00 | 52,275.58 | (3,724.42) | (6.65) |
| 10.01.99.00 | - | - | - | - |
| 10.02.05.01 | 80,000.00 | 79,980.67 | (19.33) | (0.02) |
| 10.02.05.02 | - | - | - | - |
| 10.02.05.03 | 34,000.00 | 45,091.92 | 11,091.92 | 32.62 |
| 10.02.05.04 | 240,000.00 | 223,413.69 | (16,586.31) | (6.92) |
| 10.02.05.99 | 10,000.00 | 3,812.13 | (6,817.87) | (61.88) |
| 20.03.02.17 | 95.00 | 121.64 | 26.64 | 21.00 |
| 20.03.03.01 | 3,000.00 | 1,129.22 | (1,870.78) | (19.35) |
| மொத்தம் | 614,555.00 | 615,888.38 | 333.38 | 0.05 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வரம்புகள்

இலங்கை சுங்கத்திற்குரிய 24701 ஆம் இலக்க விடய இலக்கமுடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் பொருட்டு பாராளுமன்றம் விதித்திருந்த வரம்புகளும் உள்ளவாறான பெறுமதியும் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதி கூடிய வரம்பு | உள்ளவாறானது | ஆகக் குறைந்த வரம்பு | உள்ளவாறானது | அதி கூடிய வரம்பு | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 49.00 | 25.19 | 40.00 | 48.43 | 310.00 | 201.79 |

**2.3.2 கைப்பற்றப்பட்ட அல்லது பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவின முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வரம்புகள்**

இலங்கை சுங்கத்தால் கைப்பற்றப்பட்ட அல்லது பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவின முற்பணக் கணக்கு தொடர்பாகப் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வரம்புகளும் உள்ளவாறான பெறுமதிகளும் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதி கூடிய வரம்பு | உள்ளவாறானது | ஆகக் குறைந்த வரம்பு | உள்ளவாறானது | அதி கூடிய வரம்பு | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 110 | 4.59 | 2.00 | 2.56 | 29.00 | 26.65 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

இலங்கை சுங்கத்தின் 7002/0000/00/0071/0015/000 ஆம் இலக்க கட்டு நிதிக் கணக்கின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 76.83 மில்லியன் ஆகும்.

**2.5 பொது வைப்புக் கணக்கு**

இலங்கை சுங்கத்தின் கீழ்வரும் 05 வைப்புக் கணக்குகளது 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 16,906.77 மில்லியனாகும். விபரம் வருமாறு.

| கணக்கு இலக்கம் | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0015/0127/000 | 9,977.35 |
| 6000/0000/00/0001/0035/000 | 4.06 |
| 6000/0000/00/0006/0032/000 | 1,656.69 |
| 6000/0000/00/0006/0061/000 | 4,640.25 |
| 6000/0000/00/0006/0062/000 | 628.42 |
| மொத்தம் | 16,906.77 |

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

இலங்கை சுங்கத்தின் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேலே 1.1 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புகளுள் போதியதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. போதியதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை**

இலங்கை சுங்கம் கீழே காணப்படும் சில பதிவேடுகளைப் பேணியிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (i) | பொறுப்புகளுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்படவில்லை |
| (ii) | மின்சார உபகரணப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்படவில்லை |
| (iii) | கடமைத் தொலைபேசிகளுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) | பேணப்படவில்லை |
| (iv) | ஒதுக்கீட்டு (ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவின)ப் பேரேடு | நிதிப்பிரமாணம் 447 | நாளதுவரையாக்கப்பட வில்லை. |
| (v) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட வில்லை. |
| (vi) | கணனிகள், துணைப் பாகங்கள் மென் அணிகள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய 1A1/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட வில்லை. |

**3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 21 காணிகளது உரித்தை உறுதிசெய்வதற்கான ஆவணங்களை இலங்கை சுங்கம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கவில்லை.

**3.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் வழங்குதல்**

இலங்கை சுங்கத்திற்கு மீளாய்வாண்டின்போது சமர்ப்பிக்கப்பட்ட 23 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2016 யூன் 30 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்படவில்லை. அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 43,305.62 மில்லியனாகும்.

## 3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.4.1 வரவு, செலவுத் திட்ட வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 247-01-01-2401 ஆம் இலக்க பயிற்சி மற்றும் இயலுமை அபிவிருத்தி செலவின விடயத்தின் கீழ் ரூபா 2.00 மில்லியனுக்கான நிதியேற்பாடு வருடாந்த வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந் நிதியேற்பாட்டில் ரூபா 1.24 மில்லியன் 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று பிறமூலதனச் செலவின விடயங்களுக்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. பயிற்சி மற்றும் இயலுமை அபிவிருத்திக்கு அவசியமான ரூபா 2.44 மில்லியன் முகாமைத்தவ இழப்பீடு நிதியத்திலிருந்து செலவழிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய, பயிற்சி மற்றும் இயலுமை அபிவிருத்தி தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட நிதியை, குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்தாது முறையற்றவாறு பிற செலவின விடயங்களுக்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 04 மூலதனச் செலவின விடயங்களுக்கு ரூபா 36.81 மில்லியன் கூட்டுத்தொகை நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாடு ரூபா 13.02 மில்லியனால் அதிகரித்து ரூபா 49.83 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அந்த 04 செலவின விடயங்களில் ஏற்பட்ட அதிகூடிய செலவினமானது தவிர்க்கப்படுவதன் பொருட்டு முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்திலிருந்து ரூபா 15.48 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது. வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் நிதியேற்பாட்டை மேற்கொண்டு, அந்நிதியேற்பாட்டு எல்லைக்குள் குறித்த நோக்கத்தை நிறைவேற்றும் செயற்பாட்டை முகாமைத்துவமிட வேண்டுமாயினும், அதற்கமைய இலங்கை சுங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

## 3.5 கட்டு நிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கில் இருந்த மீதி ரூபா 76.83 மில்லியனாகும். அம்மீதியில் ரூபா 2.00 மில்லியன் 2016 யூலை 31 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. அம் மீதியானது 2008 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வருவதாகும்.

(ஆ) 2015 யூலை 14 ஆந் தகிதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தஞ் செய்யப்பட்டவாறான 371(5) ஆம் நிதிப் பிரமாணத்திற்கமைய, பணி முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டுமாயினும், பெறப்பட்ட 17 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட பணிநிமித்தக் கட்டுநிதியாகிய ரூபா 1,093,497 கூட்டுத் தொகையானது பணி முடிவடைந்த பின்னரும் 01 முதல் 10 மாத கால தாமதத்தின் பின்னர் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது.

(இ) முற்பணப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 பொது வைப்புக் கணக்கு

இலங்கை சுங்கம் பேணிய வைப்புக் கணக்கு தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் தெரியவந்தன.

(அ) நானாவித வைப்புக் கணக்கு இலக்கம்
6000/0000/00/0015/0127/000

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 யூலை 12 ஆந் திகதிய 209/2010 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3(1) ஆம் பந்தியின் பிரகாரம் வைப்புப் பேரேடுகளில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவறான மீதி காட்டப்பட்டிருக்கவில்லை. அந்த வைப்புப் பேரேடு முறையாக நாளது வரையாக்கப்படவில்லை.

(ii) திறைசேரிப் புத்தகங்களுக்கும் திணைக்களப் புத்தகத்துக்குமிடையே 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய ரூபா 45,883,133 வித்தியாசத்தை மீளாய்வாண்டு முடிவளவிலேனும் இனங்கண்டு தேவையான சீராக்கல்களை மேற்கொண்டு கணக்கிணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) பல்வேறு வைப்புப் பெறுவனவுகளுக்குரிய உப பதிவேட்டுத் தனிப்பட்ட மீதிகளது கூட்டுத் தொகைக்கும் கணக்கில் காட்டப்பட்ட மீதிகளது கூட்டுத் தொகைக்குமிடையே ரூபா 140,839,576 வேறுபாடு நிலவியபோதும், அவ்வேறுபாட்டை இணக்கஞ் செய்து திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை.

(iv) பல்வேறு வைப்புகளுக்குரிய சில நானாவித கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய உபபதிவேட்டுத் தனிப்பட்ட மீதிகளது கூட்டுத் தொகைக்கும் கணக்கில் காட்டப்பட்ட மீதிகளது கூட்டுத்தொகைக்குமிடையே ரூபா 13,361,163 வேறுபாடு நிலவியபோதும், அவ்வேறுபாட்டை இணக்கஞ் செய்து திருத்தம் மேற்கொள்ளவில்லை.

(ஆ) வானூர்திமூலம் கொண்டுவரப்படும் பொருட்களுக்கான வைப்புக் கணக்கு இலக்கம் 6000/0000/00/0001/0035/000

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டு ஆண்டுகளைக் கடந்த ரூபா 467,249 கூட்டுத் தொகையுடைய 29 வைப்புகள் சம்பந்தமாக 571(2) ஆம் இலக்க நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ii) மீளாய்வாண்டினது வைப்புக் கணக்கில் ரூபா 1,640,122 பெறுவனவு கணக்கிலிடப்படவில்லை.

(iii) மேற்படி வைப்புக் கணக்குகளுக்கிடையே 2015 செப்டம்பர் 01, 2015 டிசெம்பர் 20 மற்றும் 2015 டிசெம்பர் 21 ஆகிய திகதிகளில் விடுவிக்கப்பட்ட ரூபா 1,610,700 கூட்டுத் தொகையுடைய வைப்புகள் சம்பந்தமான தகவல்கள் வைப்புப் பேரேட்டிலிடப்படவில்லை. இதன் காரணமாக, சமர்ப்பிக்கப்பட்ட வைப்புக் கணக்கில் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்த வைப்புத் தொகையான ரூபா 1,610,700 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(iv) வைப்புப் பேரேடு முறையாக நாளதுவரையாக்கப்படவில்லை.

**3.7 வருமானக் கணக்கு**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்களிப்பு உத்தியோகத்தராக 16 வருமானக் குறியீட்டு வருமானத்திற்கான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானச் சேகரிப்பு, கணக்கிலிடல்

மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் என்னும் கடமைகள் திணைக்களத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவ்வருமானக் குறியீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மதுபானம் மற்றும் புகையிலை நீங்கலாக ஏனைய பண்டங்கள் மீதான உற்பத்தி வரி சம்பந்தமாக, உற்பத்தி வரி அதிகாரச் சட்டத்தை அமுலாக்குவதற்கு சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவகாசத்தைப் பெறுமுகமாக 1990 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தைத் திருத்தி, ஒருங்கிணைந்த உற்பத்தி வரி விசேட ஏற்பாடுகள் அதிகாரச்சட்டதை ஏற்படுத்துவதற்கு 1993 மார்ச் 17 ஆந் தகிதிய 93/360/060 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் கீழ் நிதி அமைச்சரின் செயலாளருக்குச் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் குறித்த திருத்தங்களுடன் அதிகாரச் சட்டத்தின் வரைவு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின்போது முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பிரதேச உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி வரியில் 2015 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த வரி நிலுவை ரூபா 34.28 மில்லியனாகும். வரி நிலுவையில் எதுவுமே மீளாய்வாண்டின்போது சேகரிக்கப்படவில்லை. எனினும், இறக்குமதி செஸ் வரி வருமானக் குறியீட்டின் கீழ் சேகரிக்கப்பட்ட ரூபா 286,733 பிரதேச உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி வரி வருமானக் குறியீட்டின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது 08 வருமானக் குறியீடுகள் சம்பந்தமாக வருமானக் கணக்குகளில் காசாகத் திருப்பிச் செலுத்தப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 36,434.69 மில்லியன் எனக் காட்டப்பட்டிருந்தது. அப்பெறுமதியில் ரூபா 36,186.53 மில்லியன் அல்லது 99 சதவீதம் பிழை திருத்தங்களுக்கான வரவு வைத்தலாக உள்ளடக்கப்பட்டனவாகும்.

(ஈ) வருமானக் குறியீடுகள் இலக்கம் 10.01.01.00 மற்றும் 20.03.03.01 என்பவற்றிற்கு முறையே ரூபா 9,215,001,221 மற்றும் ரூபா 13,751 பிழை திருத்தல் மேற்கொள்ளப்பட்டதைக் குறிக்கும் நாட்குறிப்பு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமான நிலுவை அறிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்த வருமான வரி நிலுவை ரூபா 19,493.54 மில்லியனாகும். அது ஒட்டுமொத்த வருமான வரி நிலுவையின் 59 சதவீதம் ஆகும். அது 2014 ஆம் ஆண்டிற்கு முன்னரான வருமான வரி நிலுவையாகும். அவ்வாறே, 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் வருமான வரி நிலுவை 21.62 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 3,466.70 மில்லியன் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

(ஊ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இறக்குமதி வரி நிலுவை ரூபா 7,468.90 மில்லியனாகும். அது ஒட்டு மொத்த வருமான வரி நிலுவையின் அதிகூடிய 38.31 சதவீதமாக இருந்தது. இறக்குமதி வரியின் நிலுவை 2014 உடன் ஒப்பிடப்பட்ட 2015 ஆம் ஆண்டில் 22.79 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 1,386.56 மில்லியன் அதிகரிப்புள்ளாகியிருந்தது. அவ்வாறே, வரி வருமான நிலுவையானது 2006 முதல் 2014 வரையான காலப்பகுதியின் போது ரூபா 5,921.66 மில்லியன் அல்லது 79.28 சதவீதமாக இருந்தது.

(எ) 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி வருமானத்தில் ரூபா 3,118.98 மில்லியன் நிலுவையாக இருந்தது. அது ஒட்டுமொத்த வருமானத்தில் 16 சதவீதமாகும். அவ்வருமான நிலுவையில் 86.08 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 2,684.77 மில்லியன் 2006 முதல் 2012

வரையிலானதாகும். இலங்கை சுங்கம் அந்த வருமான நிலுவையை அறவிடுவதற்குப் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ஏ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு இறக்குமதி செஸ் வரியாக ரூபா 1,604.19 மில்லியன் நிலுவையாக இருந்தது. அது ஒட்டு மொத்த வருமான நிலுவையில் 8.23 சதவீதமாகும். 2006 முதல் 2014 வரையான காலப்பகுதியின் போது ரூபா 1,542.31 வருமானம் நிலுவையாக இருந்தது. அது ஒட்டுமொத்த செஸ்வரி வருமான நிலுவையின் 96.14 சதவீதமாகும். குறித்த வருமான நிலுவையை அறவிடுவதற்கு தொடர் ஞாபகமூட்டும் கடிதங்கள் அனுப்பப்பட்டதாகக் கணக்காய்வுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், அந்நிலுவை வருமானத்தை அறவிடுவதானது 2016 ஏப்ரல் 30 வரை தவறியிருந்தமை தெரியவந்தது.

(ஐ) 2015 சனவரி 01 இல் உள்ளவாறான விசேட வர்த்தகப் பண்டங்கள் வரி வருமானமாக ரூபா 15.15 மில்லியன் வருமான நிலுவையாக இருந்தது. 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அது ரூபா 3,598.08 மில்லியன் வரை ரூபா 3,582.93 மில்லியன் அல்லது 23649 சதவீத அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது. இதன் பொருட்டு 2015 ஆண்டின்போது அரச நிறுவனம் ஒன்றினால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக் கையிருப்புக்குரிய, நிலுவையாக இருந்த, விசேட வர்த்தகப் பண்ட வரி வருமானம் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அந்த அரச நிறுவனத்தால் 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் நானாவித வரி வகைகளின் கீழ் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த வரிகளது கூட்டுத்தொகை ரூபா 718.12 மில்லியனாகும். இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக் கையிருப்பில் ஒரு பகுதி சந்தைக்கு வழங்கப்படுவதற்கு முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கணக்காய்வில் உறுதி செய்யப்படவில்லை. சில அரிசிக் கையிருப்பானது காலம் கடந்தும் விலங்குகளுக்கு உணவாக வழங்கப்பட்டும் அழிவுற்றும் இருந்தன. அதன் காரணமாக, அந்த அரச நிறுவனங்கள் மூலம் பெறவேண்டிய விசேட வர்த்தகப் பண்ட வரி வருமானமாகிய ரூபா 3,582.93 மில்லியனை அறவிடுவது நிச்சயம் அற்றது ஆகியது.

(ஒ) மதுபான உற்பத்தி வரி வருமானமாக 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 89.26 மில்லியன் வருமான நிலுவையாக இருந்தது. குறித்த கம்பனி கொடுப்பனவைப் புறக்கணித்தமையால் அந்நிலுவை 2001 தொடக்கம் தொடர்ந்தவாறிருந்தது. வருமான நிலுவையை அறவிடுவதற்கு இலங்கை சுங்கம் அக்கம்பனிக்கு எதிராக வழக்குத் தொடுத்திருந்தது. 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அவ்வருமான நிலுவையை அறவிடுவதற்கு இலங்கை சுங்கம் தவறியிருந்தது.

(ஓ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டு மொத்த உற்பத்தி வரி வருமான நிலுவையில் ரூபா 1,084.65 மில்லியன் அல்லது 5.56 சதவீத மோட்டார் வாகன உற்பத்தி வரி வருமான நிலுவையும் உள்ளடங்கியிருந்தது. வரி அறவிடுவதை ஒத்தி வைக்கும் அடிப்படையில் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்துடன் அரச நிறுவனங்களுக்கு வாகனங்கள் விடுவிக்கப்பட்டமையால் இவ்வாறாக மோட்டார் வாகன உற்பத்தி வரியானது மென் மேலும் அதிகரித்தவாறிருந்தது.

(ஔ) ஏனைய உற்பத்தி வரி வருமானமாக 2006 முதல் 2014 வரையான காலப்பதியின் போது ரூபா 6.70 மில்லியன் வருமானம் நிலுவையாக இருந்தது. அது ஏனைய ஒட்டுமொத்த வரி வருமான நிலுவையின் 93.94 சதவீதமாகும். அந்த வருமான நிலுவையை அறவிடுவதற்குத் தேவையான சட்டபூர்வ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும், அவ்வருமான நிலுவை அறவிடப்படுவதானது நலிவான மட்டத்திலேயே இருந்தது.

(க) மீளாய்வாண்டினது 03 வருமானக் குறியீடுகளுக்கெனக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்குகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதியானது வருமானப் பேரேட்டில் குறிப்பிடப்பட்ட பெறுமதியுடன் வேறுபட்டிருந்தது. ஆயினும், அப்பெறுமதி கணக்கிணக்கஞ் செய்யப்பட்டதாக வருமானக் கணக்களிப்பு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்தியிருந்தார்.

(ங)	மீளாய்வாண்டில் ஆடைகளது தேசிய விற்பனை மீதான கட்டண வருமானத்தில் திருத்தஞ் செய்யப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 100 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தது. எனினும், வருமானக் கணக்கில் அது ரூபா 95 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 5 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ச)	மீளாய்வாண்டினது தண்டப்பணம் மற்றும் பறிமுதல் செய்யப்படனவற்றின் வருமானத்தினது திருத்தஞ் செய்யப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 1,400 மில்லியன் ஆகியபோதும், வருமானக் கணக்கில் அது ரூபா 3,000 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தது.

## 3.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

விடய இலக்கம் 24701 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ)	கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவிட வேண்டியிருந்த நிலுவை மீதி ரூபா 201.73 மில்லியனாகும். அந்தக் கடன் மீதி நிலுவை 1992 முதல் 2015 வரையான காலப்பகுதிக்குரியதாகும். அக்கடன் மீதி நிலுவையை அறவிடுவதிலான பின் தொடர் நடவடிக்கைகள் நலிவடைந்திருந்தன.

(ஆ)	தனிப்பட்ட மீதிகளை வகைப்படுத்தும் பொழிப்பினது கூட்டுத் தொகை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கினது மீதி என்பவற்றுக்கிடையே ரூபா 63,009 வேறுபாடு தெரிய வந்தபோதும், அவ்வேறுபாட்டை இணக்கஞ் செய்து திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ)	1994 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் இடமாற்றத்திற்குள்ளான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி தொடர்பான பட்டோலையில் இடமாற்றம் பெற்ற திகதி மற்றும் இடம் என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3.9 கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவின முற்பணக் கணக்கு

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)	மீளாய்வாண்டிற்கான முற்பணக் கணக்கு தொடர்பாக முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தது.

(ஆ)	முற்பணக் கணக்கில் அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 26,635,510 ஆகும். இந்தக் கடன் மீதி நிலுவையை அறவிடுவதிலான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் இருந்தன.

(இ)	செலவுக்கென முற்பணம் பெறப்பட்ட சில நிகழ்வுகளைப் பரிசீலிக்கையில் அந்நிகழ்வுகள் சுங்கத்தின் தவறு அல்ல என அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, அந்நிகழ்வுகளுக்கான சுங்க விசாரணைகள் நிறுத்தப்பட்டிருந்தன. எனினும், அவ் விசாரணைகளுக்குப் பெறப்பட்ட முற்பணம் ஈடு செய்யப்படுவதற்கான விதிமுறைகள் இருக்கவில்லை.

(ஈ) அறிக்கைகளும் பதிவேடுகளும் முறையாகப் பேணப்படாமையால் மேற்பார்வை சரியாக நடைபெறாது போனமை அவதானிக்கப்பட்டது.

## 3.10 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 3.10.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு குறைந்தது காலாண்டுக்கு ஒரு முறையேனும் கூட்டங்களை நடாத்தவேண்டுமாயினும், 2015 ஆம் ஆண்டில் 03 கூட்டங்களை மாத்திரமே குழு நடாத்தியிருந்தது.

### 3.10.2 வருடாந்த செயல் முன்னேற்ற அறிக்கை

2002 செப்டம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், இலங்கை சுங்கம் நிதியாண்டு முடிவடைந்த 150 நாட்களுக்குள் செயல்முன்னேற்ற அறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டுமாயினும், அவ்வறிக்கை 2016 யூலை 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.11 சொத்து முகாமைத்துவம்

இலங்கை சுங்கத்தினது சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 15,600,00 அமெரிக்க டொலர்களைச் செலவழித்து 4 ஸ்கேன் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவற்றுள் 2 மாத்திரம் 2015 ஆம் ஆண்டின்போது செயற்பட்டவாறிருந்தன. மீளாய்வாண்டின்போது இயந்திரத்தைச் சுத்திகரிப்பதற்காக ரூபா 47,222,100 மற்றும் பழுதுபார்த்தலுக்காக ரூபா 3,071,528 என செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில் 10,737 கொள்கலன்கள் அதாவது 3.2 சதவீதமான சிறிய கொள்கலன்கள் மாத்திரமே ஸ்கேன் பரிசீலினைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, ஒரு கொள்கலனைப் பரிசீலிப்பதற்கு ஏறக்குறைய ரூபா 4,684 கிரயம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மிக அதிக மூலக் கிரயத்தை வருடாந்தம் எதிர்நோக்குவதும் பெருமளவு பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவுடையதுமான ஸ்கேன் இயந்திரம் குறைவாகப் பயன்படுத்தப்படுவதும் அதிகளவு எண்ணிக்கையிலான கொள்கலன்கள் ஸ்கேன் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் அவசியம் நிலவுவதும் அவதானிக்கப்பட்டது.

(ii) இலங்கை சுங்கம் ரூபா 859,500 செலவில் கொள்வனவு செய்திருந்த கைவிரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் 07 இயந்திரங்கள் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் பயன்படுத்தப்படாதிருந்தன. சுங்க உத்தியோகத்தர்கள் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படுவதை ஏற்றுக் கொள்ளாமையும் புதிய சுங்கக் கட்டிட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இவ்வியந்திரத்தை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையும் காரணமாக இவ்வியந்திரங்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

(iii) புதிய சுங்கக் கட்டிடத்தில் ரூபா 21,643,754 செலவில் நிறுவப்பட்ட கதவுக் கட்டுப்பாட்டு முறைமை மீளாய்வாண்டு இறுதியிலும் செயற்படும் நிலையில் இருக்கவில்லை.

(ஆ) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை மேற்கொள்ளுதல்

2014 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டின்போது பண்டங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான தகவல்கள் மற்றும் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் என்பவற்றைப் பதிவு செய்து அவ்வறிக்கையை 2015 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதை உறுதி செய்யும் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) வெளிநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

சில சொத்துக்கள் அமைச்சினால் முறையற்றவாறு வெளிநபர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த சில சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் வருமாறு.

(i) இலங்கை சுங்கத்திற்குரிய வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் உள்ள சில காணிகள் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்படாது முப்படையினரால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ii) நீர்கொழும்பு முன்னக்கரயில் உள்ள காணி இலங்கை சுங்கத்தால் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்படாது கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) இலங்கை சுங்கத்திற்குரிய நீர்கொழும்பு செல்பி வீதி மற்றும் நீர்கொழும்பு ஸ்டீவன் வோக் ஒழுங்கையில் அமைந்துள்ள காணிகள் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்படாது வெளிநபர்களால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.12 தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்**

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கும் குறைவாக இலங்கை சுங்கத்தினால் தீர்த்து வைக்கப்படாதிருந்த பொறுப்புகள் ரூபா 21.13 மில்லியன் ஆகும்.

**3.13 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | |
| 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டம் | - | (i) சிகரட் உற்பத்தி செய்யும் கம்பனி ஒன்றிற்கு அதன் முகவர் நிறுவனம் அல்லது மொத்த விற்பனை நிறுவனத்தால் உற்பத்தி வரிக் கொடுப்பனவின் பொருட்டு இலங்கை |

சுங்கத்தின் உற்பத்தி வரிப் பிரிவில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ii) அரசாங்கம் அவ்வப்போது விலைகளில் மாற்றங்களை மேற்கொள்ளும் போது உற்பத்தி வரி அதிகாரச்சட்டத்தின் 5(1) மற்றும் 32 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிறுவனத்தின் களஞ்சியங்களில், பிரதேச முகவர்களது களஞ்சியங்களில், மொத்த விற்பனைக் களஞ்சியங்களில் இருக்கும் சிகரட் கையிருப்புக்குரிய உற்பத்தி வரியைக் கணித்து அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை

| | | | |
|---|---|---|---|
| (i) | XII அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு | - | இலங்கை சுங்கத்தின் சில பிரிவுகளில் 190 பொது மாதிரிப் படிவத்தில் விடுமுறைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | XII அத்தியாயத்தின் 5.1 மற்றும் 8.1 ஆம் பிரிவுகள் | 297,141 | அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு உரித்தான லீவு ஒரு ஆண்டிற்கு 45 நாட்களேயாகும். எனினும், அவ்வரம்பை மீறி உத்தியோகத்தர்கள் லீவைப் பெற்றிருந்த 05 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>அவ்வுத்தியோகத்தர்கள் லீவை ஈடுசெய்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திராததுடன் 2015 ஆம் ஆண்டிற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | XII அத்தியாயத்தின் 22.4 ஆம் பிரிவு | - | பதவியணியினரது சம்பளமற்ற விடுமுறையை அறிவிக்கும் தகவல்களை 96 ஆம் மாதிரிப் படிவத்தில் மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கியிருக்க வில்லை. |
| (iv) | XV அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு | - | வெளிநாட்டுப் பயணங்களின் போது வர்த்தக வகுப்புகளில் பயணஞ் செய்ய முடியாத உத்தியோகத்தர்கள் 03 சந்தர்ப்பங்களில் வியாபார வகுப்பில் பயணஞ் செய்திருந்த 03 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 272(1) | - | 2015 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் இலக்க முறைப்படி கோவையிடப்பட்டுக் கட்டி வைக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 447(2) | - | செலவினப் பேரேட்டின் ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழும் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு மற்றும் மேலதிக நிதியேற்பாடு குறிப்பிடப்பட்ட இடங்களில் குறித்துக் கொள்ளப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | நிறைவேற்றுதர உத்தியோகத்தர் ஒருவரால் அது சரியானது என சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் | - | மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு மற்றும் காசு எனக் குறிப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 447(4) | - | பொறுப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 565(3) | - | வைப்புப் பேரேடுகளில் இணக்கக் கணக்குகள் பேணப்படவில்லை. |
| (vi) | நிதிப்பிரமாணம் 565(5) | - | ஒவ்வொரு ஆண்டிற்குமென பொது 71 மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்படும் மாதாந்த வைப்புப் பொழிப்புக்கூற்று அடுத்தவரும் மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (vii) | நிதிப்பிரமாணம் 571(1) | - | வைப்பிலிடப்பட்டு இரு ஆண்டுகள் கடந்த சகல வைப்புகளுக்குமான அரையாண்டு நிரல் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட வில்லை. |
| (viii) | நிதிப்பிரமாணம் 751(1) | - | திணைக்களத்தில் கிடைக்கப் பெறும் சகல பொருட்களும் உடனடியாக பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிராத சந்தர்ப்பங்கள் நிலவின. |

(ஈ) திணைக்களச் சுற்றறிக்கை

---

| | | | |
|---|---|---|---|
| (i) | 2010 ஏப்ரல் 28 ஆந் திகதிய 696 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | 1,202,591 | வைப்புக்கான பற்றுச்சீட்டுக்களை மாத்திரம் சமர்ப்பித்திருந்த 06 சந்தர்ப்பங்களில் ரூபா 718,591 கூட்டுத் தொகையுடைய வைப்புகள் விடுவிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே, பயணிகளது பயணப் பொதிக்கூற்றுப் பத்திரம் (உட்புகுதல்) மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்த 04 சந்தர்ப்பங்களில் ரூபா 484,0000 தொகையுடைய வைப்புகள் விடுவிக்கப்பட்டிருந்தன. |
| (ii) | 2010 திசெம்பர் 19 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | - | கட்டுநாயக்கா விமான நிலைய பயணிகள் அலுவலகத்தில் வெளிச் செல்லும் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3.14 செயல் முன்னேற்றம்

---

2015 ஆம் ஆண்டிற்காக வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

**வருமானச் சேகரிப்பு**

மீளாய்வாண்டினது வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட வரி வருமானம் மற்றும் உள்ளவாறான வரி வருமானம் என்பன முன்னைய ஆண்டின் வரி வருமானத்துடன் ஒப்பிடப்பட்டுக் கீழே தரப்பட்டுள்ளன.

| வரி வகை | 2015 திருத்திய மதிப்பீட்டின் பிரகாரமான வரி வருமானம் | 2015 உள்ளவாறான வரி வருமானம் | 2015 உள்ளவாறான வரி வருமானம், மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக | 2014 திருத்திய மதிப்பீட்டின் பிரகாரமான வரி வருமானம் | 2014 உள்ளவாறான வரி வருமானம் | 2014 உள்ளவாறான வரி வருமானம், மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| <u>வெளிநாட்டு வர்த்தக வரி</u> | | | | | | |
| இறக்குமதி வரி | 92,000 | 108,116 | 117.51 | 85,000 | 77,726 | 91.44 |
| ஏற்றுமதி வரி | 60 | 33 | 55.00 | 25 | 24 | 96.00 |
| துறைமுக மற்றும் விமான நிலைய வரி | 55,000 | 56,733 | 103.15 | 80,000 | 68,646 | 85.81 |
| செஸ்வரி (இறக்குமதி) | 42,000 | 42,467 | 101.11 | 40,000 | 35,622 | 89.06 |
| மோட்டார் வாகன சலுகை வரி | - | - | - | - | - | - |
| பிரதேச உட்கட்டமைப்பு வசதி வரி | - | 0.29 | - | - | 1 | - |
| செஸ்வரி (ஏற்றுமதி) | 3,400 | 2,713 | 79.79 | 5,000 | 3,084 | 61.68 |
| விசேட வர்த்தகப் பொருள் வரி | 56,000 | 52,276 | 93.34 | 65,000 | 47,952 | 73.77 |
| ஏனையவை | - | - | - | - | - | - |
| <u>உற்பத்தி வரி</u> | | | | | | |
| சிகரட் | 80,000 | 79,981 | 99.97 | 61,000 | 57,204 | 93.78 |
| மதுபானம் | - | - | - | - | 12 | - |
| பெட்றோலியம் | 34,000 | 45,092 | 132.62 | 40,000 | 28,732 | 71.83 |
| மோட்டார் வாகனம் | 240,000 | 223,414 | 93.09 | 70,000 | 76,435 | 109.19 |
| ஏனையவை | 10,000 | 3,812 | 38.12 | 7,000 | 3,087 | 44.10 |
| உள்ளூர் ஆடை விற்பனைக் கட்டணம் | 100 | 121 | 121.00 | 95 | 89 | 93.68 |
| தண்டப் பணமும் பறிமுதலும் | 1,400 | 1,129 | 80.64 | - | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ---------- | ----------- | --------- | ---------- | ----------- | ------- |
| மொத்தக் கூட்டுத்தொகை | **613,960** | **615,888** | **100.31** | **453,120** | **398,614** | **87.97** |
| | ====== | ====== | ===== | ====== | ====== | ==== |

(அ) இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கத் திணைக்களம் 16 வருமானக் குறியீடுகளின் கீழ் சேகரித்த வருமானம் ரூபா 615,888 ஆகும். முன்னைய ஆண்டில் 15 வருமானக் குறியீடுகளின் கீழ் சேகரித்த வருமானம் ரூபா 398,614 மில்லியன் ஆகும். அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது வருமானம் ரூபா 217,275 அல்லது 54.51 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மோட்டார் வாகன உற்பத்தி வரி, பெட்றோலிய உற்பத்திவரி, சிகரட் உற்பத்தி வரி, இறக்குமதி வரி மற்றும் ஏனைய உற்பத்தி வரி என்பவற்றின் அதிகரிப்பு இதற்கான காரணங்களாகும். அவ்வாறே, இவ்வதிகரிப்புக்கு அதிகூடிய வரி விகிதத்தை அமுலாக்கியமை, இறக்குமதிப் பொருட்களது எண்ணிக்கையில் அதிகரிப்பு, அந்நியச் செலாவணி விகிதத்தில் நலிவு, பொருட்களது வெளிநாட்டு விலைகளில் அதிகரிப்பு என்பன குறிப்பிடத்தக்க தாக்கத்தை விளைவித்திருந்தன. அத்தாக்கங்களால் அரச வருமானத்திற்கு ஏற்பட்டிருந்த பங்களிப்பை அறவிடுவதற்குரிய குறிப்பிடத்தக்க விதிமுறைகள் இலங்கை சுங்கத்தால் அறிமுகஞ் செய்திருக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது இலங்கை சுங்கத்தின் ஒட்டுமொத்த வருமானமான ரூபா 615,888 மில்லியனில் 17.55 சதவீதமான ரூபா 108,116 மில்லியன் இறக்குமதி வரி வருமானக் குறியீட்டின் கீழ் சேகரிக்கப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட இறக்குமதி வரி வருமானத்துடன் ஒப்பிடப்படுகையில் 39.1 சதவீத அதிகரிப்பாகும்.

(இ) இலங்கை சுங்கத்தின் மொத்த வரி வருமானத்தின் 13 சதவீதம் சிகரட் உற்பத்தி மூலமானதே என நிரூபணமாகின்றது. 2014 ஆம் ஆண்டைவிட 2015 ஆம் ஆண்டின்போது அது ரூபா 22,777 மில்லியன் அல்லது 39.82 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதற்கான காரணம், சிகரட் உற்பத்தியானது முன்னைய ஆண்டைவிட 349,065,680 கூறுகளால் அதாவது 9.6 சதவீதத்தால் அதிகரித்தமையும் மொத்த சிகரட் உற்பத்தியின் ஏறக்குறைய 87 சதவீதமானது 73 மி.மீ முதல் 84 மி.மீ வரையான நீளமுடைய சிகரட் வகைகளுக்கு அறவிடப்பட்ட உற்பத்தி வரி அதிகரிப்பு போன்ற மூல காரணங்களுமாக அமைந்தன.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் போது பெட்றோலிய உற்பத்திவரியாக ரூபா 45,092 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது இலங்கை சுங்கத்தின் ஒட்டு மொத்த வருமானமாகிய ரூபா 615,888 மில்லியனின் 7.32 சதவீதமாகும். அது முன்னைய ஆண்டைவிட ரூபா 16,360 மில்லியன் அல்லது 56.94 சதவீத அதிகரிப்பாகும். பெட்றோலிய எண்ணெய் இறக்குமதி மீதான உற்பத்தி வரி வருமானம் ரூபா 34,639 மில்லியனாக இருந்தது. அது மொத்த பெட்றோலிய எண்ணெய் உற்பத்தி வருமானத்தின் 76.82 சதவீதமாக இருந்தது. உள்ளூர் பெட்றோலிய எண்ணெய் சுத்திகரிப்பு மீதான உற்பத்தி வரி வருமானம் ரூபா 10,452 மில்லியன் ஆகியதுடன் அது மொத்தப் பெட்றோலிய எண்ணெய் உற்பத்தி வருமானத்தின் 23.18 ஆகவுமிருந்தது. மேலும், அவ்வரி வருமானத்தில் ரூபா 4,107 மில்லியன் வருமானம் முன்னைய ஆண்டிற்கான வருமானச் சேகரிப்புமாகும். பெட்றோலிய எண்ணெய் இறக்குமதி மீது உற்பத்தி வரியானது முன்னைய ஆண்டைவிட ரூபா 16,940 மில்லியன் அல்லது 95.71 சதவீதம் அதிகரித்திருந்தது. ரூபா 4,107 மில்லியன் வருமானம் முன்னைய ஆண்டிற்கான சேகரிப்புமாகும். பெட்றோலிய இறக்குமதி மீதான உற்பத்தி வரி முன்னைய ஆண்டைவிட ரூபா 16,940 மில்லியன் அல்லது 95.71 சதவீதம் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின்போது பெற்றோலிய எண்ணெய் சுத்திகரிப்பு மீது அறவிடப்பட்ட உற்பத்தி வரி வருமானம் முன்னைய ஆண்டுடன்

ஒப்பிடுகையில் ரூபா 2,229 மில்லியன் அல்லது 26 சதவீதம் குறைந்திருந்தது. எண்ணெய்ச் சுத்திகரிப்புக்குப் பதிலாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் சுத்திகரித்த எண்ணெயை அதிகளவில் இறக்குமதி செய்தமை மொத்த உற்பத்தி வரி அதிகரிப்புக்கான மூல காரணமாகும். உள்ளூரில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோல் மற்றும் டீசல் குறைவாக விநியோகிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலும் டீசலும் அதிகளவில் வழங்கப்பட்டமையால் சுத்திகரிப்பு தொடர்பான உற்பத்தி வரியில் குறைவு ஏற்படத் தாக்கமாக அமைந்திருந்தன.

(உ) மீளாய்வாண்டின்போது இலங்கை சுங்கம் மோட்டார் வாகன உற்பத்தி வரி வருமானக் குறியீட்டின் கீழ் சேகரித்த வருமானம் ரூபா 223,414 ஆகும். முன்னைய ஆண்டில் சேகரித்த வருமானம் ரூபா 76,435 மில்லியனாகும். அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 146,979 மில்லியன் அல்லது 192.29 சதவீத வருமான அதிகரிப்பு நிலவியது. முன்னைய ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு வரி அறவிடும்போது சுங்கத்தீர்வை, பெறுமதி சேர்வரி, உற்பத்தி வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி என பல வகைவரிகள் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2014 ஒக்டோபர் 24 ஆந் திகதிய 1885/42 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சரது அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மேற்படி வரிகளுக்குப் பதிலாக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு அதிக பட்ச வரி அறவிடுதல், சுங்க விலை நிர்ணயிப்புக் குழு தீர்மானிக்கும் வாகன மதிப்பீட்டுப் பெறுமதி அவ்வப்போது குறைக்கப்பட்டமை போன்ற காரணங்களால் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்தும் சலுகை வாகன இறக்குமதி சான்றிதழ் மூலமான வாகன அதிகரிப்பும் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகன உற்பத்தி வரி வருமானம் பெருமளவு அதிகரித்திருந்தது.

(ஊ) 2015 ஆம் ஆண்டிற்கான திருத்தஞ் செய்யப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தின் உள்ளவாறான செயல்முன்னேற்றம் 0.31 சதவீதம் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டில் அது 12.03 சதவீதம் குறைந்து இருந்தது.

(எ) வருமானக் குறியீடுகள் 05 மூலம் ரூபா 50,000 மில்லியனுக்கு மேற்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்டபோதும், மீளாய்வாண்டின்போது இறக்குமதி வரி வருமானம் மற்றும் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி வருமானம் எனும் இரு வருமானக் குறியீடுகளில் மாத்திரம் எதிர்பார்த்த இலக்கு அதிகரித்திருந்தது. அதுவும் சிறிய அளவினதால் ஆனதே என அவதானிக்கப்பட்டது. அந்த வருமானக் குறியீடுகளது செயல்முன்னேற்றம் முறையே 117.51 சதவீதம் மற்றும் 103.15 சதவீதம் என்பனவாகும்.

(ஏ) விசேட வர்த்தகப் பண்டங்களது வரி சம்பந்தமாக மீளாய்வாண்டில் ரூபா 80,000 மில்லியனாக இருந்த மூல வருமான மதிப்பீடானது ரூபா 56,000 மில்லியன் வரை திருத்தஞ் செய்யப்பட்டிருந்தபோதும், ரூபா 52,275 மில்லியன் வருமானமாகச் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட வரி வருமானமானது மூலவருமான மதிப்பீட்டின் 65.34 சதவீதமாகும். திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் 93.35 சதவீதமாக அது அமைந்தது. அவ்வாறே, பெட்றோலிய எண்ணெய் உற்பத்தி வரி வருமானக் குறியீடு தொடர்பாக மீளாய்வாண்டில் ரூபா 50,000 மில்லியன் மூலவருமான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது ரூபா 34,000 மில்லியன் வரை குறைக்கப்பட்டபோதும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 45,092 மில்லியன் ஆகவிருந்தது. அதற்கமைய, உள்ளவாறான வருமானம் திருத்தஞ் செய்யப்பட்ட வருமான மதிப்பீட்டிலும் கூடுதலாக அமைந்தது.

(ஐ) ஏனைய உற்பத்தி வரி சம்பந்தமாக முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3,087 மில்லியனாக இருக்கையில் மீளாய்வாண்டில் ரூபா 7,800

மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் அது ரூபா 10,000 மில்லியனாகத் திருத்தஞ் செய்யப்பட்டிருந்தது. எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3,812 மில்லியனே. சேகரிக்கப்பட்ட வருமானம் மூலவருமான மதிப்பீட்டின் 48.87 சதவீதமாகும். அது திருத்தஞ் செய்யப்பட்ட மதிப்பீட்டின் 38.12 சதவீதமாகும்.

(ஒ) புதிய வருமான விடயமாக தண்டப் பணமும் பறிமுதல் வருமானமும் ஆகிய வருமானக் குறியீட்டின் கீழ் மீளாய்வாண்டில் மூல வரி வருமானமாக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 3,000 மில்லியனாகும். இது ரூபா 1,400 மில்லியன் வரை அதாவது மூலவருமான மதிப்பீட்டின் 46 சதவீதம் வரை திருத்தங்களுக்குள்ளாகியது. அவ்வாறே, சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,129 மில்லியன் என வருமானக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. தவறுதலாக உள்ளடக்கப்பட்ட இந்த வருமானக் குறியீட்டுடன் தொடர்பில்லாத ரூபா 201 மில்லியன் கூட்டுத்தொகையுடைய 2013, 2014, 2015 சனவரி முதல் நவெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய மேலதிக நேர வருமானத்தை நீக்கின், இவ்வருமானக் குறியீட்டின் கீழ் சேகரிக்கப்பட்ட உள்ளவாறான வருமானம் ரூபா 928 மில்லியனே ஆகும். அது மூலவருமான மதிப்பீட்டின் 31 சதவீதமாகும். திருத்தஞ் செய்யப்பட்ட வருமான மதிப்பீட்டின் 66 சதவீதம் மாத்திரமுமே ஆகும்.

### 3.15 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------

இலங்கை சுங்கத்தின் சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானவை. கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவ்வாறாகப் புலனாகிய கொடுக்கல் வாங்கல்களின் விபரம் வருமாறு.

(அ) 2014 ஆம் ஆண்டளவில் இலங்கையில் வாகன உதிரிப்பாகங்களை ஒருங்கு சேர்த்து வாகனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்தால் அவ்வாகனங்களது தொழிற்சாலை விலையில் 150 முதல் 240 சதவீதம் வரையிலான உற்பத்தி வரி செலுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும், அவ்வாகனங்களுக்கு 30 சதவீதத்துக்குக் கூடிய உள்ளூர்ப் பெறுமதியைச் சேர்த்தால் உற்பத்தி வரியைச் செலுத்த வேண்டியதில்லை என ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 1885/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் மீண்டும் 30 சதவீத உள்ளூர்ப் பெறுமதியைச் சேர்ப்பது உறுதி செய்யப்படும் வாகனங்களுக்கும் தொழிற்சாலை விலையில் 15 சதவீத வரி விதிக்கப்பட்டிருந்தது. எனினும், வாகனங்களுக்கு 30 சதவித உள்ளூர் பெறுமதியைச் சோத்துக் கொள்வது தொடர்பாக முறையாக ஆய்வு செய்யாது வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்யும் தருணத்திலேயே குறித்த உற்பத்தி வரி அறவிடப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் நிலவின. அதனால் ஏற்படக்கூடிய பெருமளவு நட்டத்தைக் கருதாது நடவடிக்கை மேற்கொண்டமை கணக்காய்வில் சர்ச்சைக்குரிய விடயமாகத் தென்பட்டது. அவ்வாறாக வாகனங்களது பாகங்கள் சேர்க்கப்பட்டு வாகனங்களை உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனத்திலிருந்து 2015 சனவரி 27 ஆந் திகதி இறக்குமதி செய்யப்பட்டிருந்த 750 மோட்டார் வாகன வெசி மற்றும் உதிரிப்பாகங்களுக்கு 15 சதவீத உற்பத்தி வரியாக இறக்குமதி செய்யப்பட்ட தினத்தின் பின்னர் ரூபா 136,305,337 அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கையில் வாகனப் பாகங்களை ஒன்று சேர்த்து வாகனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்தால் 04 வகை வாகனங்களுக்கு உற்பத்தி வரிச் சலுகையைப் பெறுவதற்கு முன்னரே சமர்ப்பிக்கப்பட்டிருந்த தொழிற்சாலை விலைகள் பின்னர் குறைத்துச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறாக விலைகளைக் குறைப்பதற்கான காரணத்தை முறையாக ஆய்வு செய்யாது இலங்கை சுங்கம் உற்பத்தி வரியை அறவிட்டிருந்தது. அது கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாகியது. அதற்கமைய, நிறுவனத்தால் 2014 ஒக்தோபர் 24 முதல் 2015 நவெம்பர் 20 வரை 5109 வாகனங்களுக்கு அண்ணளவாக ரூபா 403 மில்லியன் உற்பத்தி வரி குறைவாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) இலங்கையில் வாகனங்களை ஒன்று சேர்க்கும் நிறுவனத்தால் பெறப்படும் உற்பத்தி வரிச்சலுகை நலன்களுக்கு ஒப்பாக போதுமான பங்களிப்பு இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏற்படுமா என்பது சர்ச்சைக்குரிய விடயமாகும். அதற்கமைய, ஒரு நிறுவனம் 2014 ஒக்தோபர் 01 முதல் 2015 நவெம்பர் 20 வரையான காலப்பகுதியின் போது சுங்க ஒருங்கிணைப்பு வகைப்படுத்தல் இலக்கம் 09 க்குரிய 27 ஆம் தொகுதியின் கீழ் ஒருங்கு சேர்த்த 5829 வாகனங்களுக்குக் கொடுப்பனவு செய்திருந்த உற்பத்தி வரியானது ஏறக்குறைய ரூபா 1,531 மில்லியனாகும். அவ்வாகனங்களுக்குச் சாதாரண நடைமுறைகளின் கீழ் அறவிடப்பட வேண்டிய உற்பத்தி வரி ஏறக்குறைய ரூபா 13,177 மில்லியன் ஆகியபோதும், அச்சகல வாகனங்களுக்கும் 30 சதவீத உள்ளூர்ப் பெறுமதி சேர்ந்ததால் கூட்டுத்தொகை ஏறக்குறைய ரூபா 2,673 மில்லியன் ஆகியது. மேலும், இந்த 5829 வாகனங்களுக்கும் உள்ளூர்ப் பெறுமதிச் சேர்ப்பு மற்றும் அறவிடப்பட்ட உற்பத்தி வரியினது கூட்டுத்தொகை ரூபா 4,204 மில்லியன் ஆகும். அதற்கமைய, ரூபா 2,673 உள்ளூர்ப் பெறுமதியைச் சோத்துக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் ஈடுபடுத்திய வரி வருமானம் ரூபா 8,973 மில்லியன் ஆகும்.

(ஈ) 1996 முதல் 2002 வரையான காலப்பகுதியின் போது இலங்கை பெட்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இலங்கை சுங்கத்திடமிருந்த ரூபா 109,400,00 பெறுமதியான பிணைமுறிப் பொறுப்பை 2014 சனவரி மாதமளவிலும் இலங்கை சுங்கம் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளாதிருந்தது. எவ்வாறாயினும், பின்னர் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுங்க விசாரணைகளையடுத்து ரூபா 57,736,913 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இலங்கை சுங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அத்தொகையில் ரூபா 28,868,456 இலங்கை சுங்கத்தால் சுங்க உத்தியோகத்தர்களுக்கு வெகுமதியாக வழங்கப்பட்டிருந்தது.

அரச நிறுவனமான இலங்கை பெட்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய பிணை முறித் தெகையில் ஒரு பகுதியை அறவிட்டு, உத்தியோகத்தர்களுக்கு அதனை வெகுமதியாக வழங்குவது சர்ச்சைக்குரிய விடயமாவதுடன், குறித்த தொகையை அறவிடுவதானது இலங்கை சுங்கத்தின் பொறுப்பாகும் எனவும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, இலங்கை பெட்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இலங்கை சுங்கத்திற்கு வழங்கப்பட்ட இத்தொகையை திறைசேரி இலங்கை பெட்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மீளளிப்பதற்கு இணங்கியுள்ளதாகவும் ஆவணங்களின் மூலம் மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், மொத்தப் பிணைமுறித் தொகையான ரூபா 109,400,00 இல் கைவிடப்பட்ட ரூபா 51,663,087 பிணை முறித் தொகை சம்பந்தமாகவும் இலங்கை சுங்கம் முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) 2015 மே 01 முதல் 2015 செப்டம்பர் 04 வரையான காலப்பகுதியின் போது 406 TRJ 150W பிராடோ வகை வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. அவ்வாகனங்களில் 101 வாகனங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இவ்வாகனங்கள் யப்பானிய ஏலவிற்பனையின் போது பெறப்பட்டனவாகும். பெறக்கூடியதாக இருந்த தகவல்களின் படி அந்த ஒவ்வொரு வாகனத்தையும் கொள்வனவு செய்வதற்கு ரூபா 439,687,737 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. சுங்க வரி நடவடிக்கைகளின் பொருட்டு பெறுமதியினது கூட்டுத்தொகை ரூபா 298,306,703 ஆகக் காட்டப்பட்டமையால் குறைந்தளவு ரூபா 141,381,034 குறைவாகப் பெறுமதியிடப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.

(ii) இந்த வாகனங்களுக்கிடையே 83 வாகனங்கள் வாகனச் சலுகை அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டனவாகும். அவ்வாகன ஏலவிற்பனையின் போது விற்பனை செய்யப்பட்ட பெறுமதியுடன்

ஒப்பிடுகையில் சலுகையுடனான அனுமதிப்பத்திரங்களது அதிஉயர் வரம்பான 35.000 அமெரிக்க டொலர் தாண்டியிருந்தது. அதற்கமைய, அவ்வாகனங்களைச் சாதாரண இறக்குமதியாகக் கருதி சுங்கத் தீர்வை மற்றும் கட்டணம் என்பவற்றைக் கணிப்பிட்டிருப்பின் இழப்பிற்குள்ளான சுங்கத் தீர்வை ஏறக்குறைய ரூபா 694,341,628 ஆகவிருந்திருக்கும்.

(iii) இவ்வாகனங்களை இறக்குமதி செய்யும் போது சுங்கம் சமர்ப்பித்திருந்த இன்வொய்சுகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த பெறுமதிக்கு மாத்திரமே வங்கி நடைமுறைகளின் கீழ் செலாவணி பரிவர்த்தனை செய்யப்படலாமெனினும், உள்ளவாறான இறக்குமதிக் கிரயத்தை ஈடு செய்வதற்குத் தேவையான மேலதிக அந்நியச் செலாவணி பரிவர்த்தனை செய்யப்பட்ட விதம் சர்ச்சைக்குரிய விடயமாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஊ) இறக்குமதியாளர் ஒருவரின் கோரிக்கையின் பேரில் இறக்குமதி செய்யப்பட்ட BMW 520DSE எனும் வகையான வாகனங்களது மதிப்பீட்டு விலையைச் சுங்க மதிப்பீட்டுக் குழு குறைத்திருந்தமையால் அவ்வகையான 07 வாகனங்களில் ஏறக்குறைய ரூபா 9,051,973 சுங்க வரி இழப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், அது சம்பந்தமாக மேலும் அவதானிக்கப்பட்ட சில விடயங்கள் பின்வருமாறு.

(i) 2014 டிசெம்பர் 24 ஆந் திகதியளவில் BMW 520D SE வகை வாகனங்கள் சம்பந்தமாக சுங்க மதிப்பீட்டுக் குழு நியமித்த பெறுமதி 30,300 அமெரிக்க டொலர்களாகும். அந்த விலையின் அடிப்படையில் 2014 டிசெம்பர் 23 ஆந் திகதியன்று இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த மேற்குறித்த 07 வாகனங்களதும் தகவல்கள் சுங்கக் கணனி முறையில் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதற்கமைய, ஒரு வாகனம் ரூபா 5,361,243 எனும் வீதப்படி 07 வாகனங்களுக்கும் கொடுப்பனவு செய்யவேண்டிய மொத்தச் சுங்கவரி ரூபா 37,528,701 எனக் கணிப்பிடப்பட்டபோதும், இறக்குமதியாளர்கள் அதனைச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ii) குறித்த வாகனங்களது தகவல்கள் சுங்கக் கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கையில் அவ்வகையான வாகனங்கள் 23,000 யூரோ (27,148 அமெரிக்க டொலர்கள்) ஆகவும் 08 நாட்களின் பின்னர் அதாவது 2015 சனவரி 13 ஆந் தகிதியன்று 22,600 யூரோ (26,675 அமெரிக்க டொலர்கள்) வரை குறைக்கப்படுவதற்கான நடவடிக்கையை சுங்க விலை மதிப்புக் குழு மேற்கொண்டிருந்தது.

(iii) சுங்க விலை மதிப்புக்குழு இறுதியாக மதிப்பீடு செய்திருந்த பெறுமதியின் அடிப்படையில் மேற்படி 07 வாகனங்களுக்குமான வரியைக் கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அதற்கமைய ஒரு வாகனத்திற்கு ரூபா 4,068,104 வீதம் ரூபா 28,476,728 மாத்திரம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) வாகனங்களை இறக்குமதி செய்கையில் தீர்மானிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு வரியை அறவிடாது இறக்குமதியாளரது வேண்டுகோளின் படி மதிப்பீட்டு விலையைக் குறைத்து வரியை அறவிட நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இதனால் ஏறக்குறைய ரூபா 9,051,973 வரி இழப்பு ஏற்பட்டிருந்தது.

(v) குறித்த 07 வாகனங்களையும் இறக்குமதி செய்த திகதி மற்றும் அதற்கு அண்மித்த திகதிகளில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த அதே மாதிரியான 05 வாகனங்களுக்கு வரியைக் கணிப்பிடும்போது 30,300 அமெரிக்க டொலர்

பெறுமதியின் அடிப்படையில் வரியைக் கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(எ) மேலதிகநேர வேலை நிதியத்தின் மூலம் மேலதிகநேர வேலைக் கொடுப்பனவை மேற்கொள்கையில் விடுமுறை நாளாயின் மு.ப 8.00 தொடக்கம் அடுத்த நாள் முப. 8.00 வரையான 24 மணித்தியாலங்களுக்கும் 27 மணித்தியால மேலதிக நேர வேலைக் கொடுப்பனவும் சாதாரண நளொன்றில் பி.ப 4.45 முதல் மு.ப 8.00 வரையான 15¼ மணித்தியாலங்களுக்கும் $18^1/_4$ மணித்தியால மேலதிக நேரவேலைக் கொடுப்பனவையும் பெறும் விதத்தில் மேலதிக நேர வேலைச் சேவைக்கு வசதியளிக்கப்பட்டிருந்தபோதும், அதன் பொருட்டுப் பெறப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஏ) 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க வர்த்தமானியின் 4(1) ஆம் பந்தியின் பிரகாரம், சாதாரண நேரங்களுக்குப் புறம்பாக அல்லது சுங்கம் மூடப்பட்டிருக்கையில் உத்தியோகத்தர்கள் ஆற்றும் பணிக்கு பொது நிர்வாக அமைச்சின் செயலாளரிடம் விசாரித்தறிந்து நிதி அமைச்சின் செயலாளர் அவ்வப்போது தீர்மானிக்கும் படியை வழங்குவதற்கான அங்கீகாரத்தைப் பணிப்பாளர் நாயகம் கொண்டுள்ளபோதும், இலங்கை சுங்கத்தின் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுக்கு அவ்வாறான அங்கீகாரம் பெறப்படவில்லை.

(ஐ) சில உத்தியோகத்தர்கள் ஒரு மாதத்திற்குரிய மொத்த மணித்தியால வரம்பிற்கு அதிகமாக மேலதிக நேர வேலையில் ஈடுபட்டிருந்ததும் மேலதிக நேர வேலைப் பதிவேட்டின் பிரகாரம் ஒரு வருடத்தில் குறிப்பிடத்தக்க மாதங்களுக்கும் தொடர்ச்சியாகக் கடமைகளிலும் மேலதிக நேர வேலைகளிலும் ஈடுபட்டிருந்ததுமான அசாதாரண நிலை அவதானிக்கப்பட்டது.

(ஒ) 2014/2015 ஆம் ஆண்டில் பல சந்தர்ப்பங்களில் சிற்றுண்டிச் சாலையின் உணவினது தன்மையையும் உணவுத் தயாரிப்பில் நீலவும் நலிவையும் பதவியணியினர் புகாரிட்டிருந்தபோதும், அதே நிறுவனமே 2015/2016 க்கான சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்கு வசதி அளிக்கப்பட்டிருந்தது.

**3.16 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

இலங்கைச் சுங்கம் ஈடுபட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றனவாக அவதானிக்கப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) இலங்கை சுங்கத்தால் விமான நிலையம் மற்றும் விமானச் சேவை கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்ட ஸ்கேன் இயந்திரங்களுக்கு சுத்திகரிப்புச் சேவைக் கட்டணமாக 2009 மே தொடக்கம் செப்டம்பர் வரை இலங்கை சுங்கத்தால் ரூபா 4,887,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அத்தொகையானது 2016 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.3(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் கூறுவிலைகள் பெறப்படுவது நிறுத்தப்பட்டதன் பின்னர் கூடிய விரைவில் கூறு விலையைச் சமர்ப்பித்தவரோ அல்லது பிரசன்னமாவதற்கு விருப்பமுடைய அவரது பிரதிநிதியோ முன்னிலையில் கூறு விலைகளைத் திறக்க வேண்டுமாயினும், இலங்கை சுங்கம் சிற்றுண்டிச் சாலையை நடாத்துவதற்கான கூறுவிலைகளைத் திறக்கையில் 03 நிறுவனங்கள் தொடர்பாக அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

## 3.17 நிதிமோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பண்டங்களையும் பயணிகளையும் கொண்டு செல்லும் நோக்கமல்லாத விசேட பணிகளுக்கு மிகவும் குறைந்த சுங்க வரி அறவிடப்படும் 8705 ஆம் இலக்க வகைப்படுத்தலின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்யும் போது ஏற்படும் மோசடிகள் சம்பந்தமாக கடந்த பல ஆண்டுகளாகக் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும், அம்மோசடிகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு சுங்கம் முறையான கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகஞ் செய்திராமையால் மீளாய்வுக்குரிய கணக்கீட்டு ஆண்டின்போதும், தொடர்ந்து அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறு.

(i) பண்டங்கள் மற்றும் போக்குவரத்து நோக்கத்தைத் தவிர விசேட பணிகளுக்கு மிகவும் குறைந்த சுங்கத் தீர்வை அறவிடப்படும் 8705 ஆம் இலக்க வகைப்படுத்தலின் கீழ் விசேட பணிகளுக்கான வேன் இறக்குமதி செய்யப்படுவதற்கான வசதி வழங்கப்பட்டிருந்தது. அந்த வேனின் அதிகூடிய பயன்படு காலம் 07 ஆண்டுகளாயினும், அக்காலத்தைக் கடந்த 160 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

(ii) விசேட பணிகளுக்கான பழைய வேன்கள் பயணங்களுக்குப் பயன்படுத்தப்படுவதால் சூழல் மாசடைவது அதிகரிப்பதும் வாகனங்களது பயன்படு காலம் குறைவடைவதும் ஆகிய சமூகப் பிரச்சினைகள் ஏற்படுவது போன்றே அவ்வாகனங்களைப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு அல்லது பயணிகள் போக்குவரத்துக்கான வேன்கள் எனப் பதிவு செய்வதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டிருந்தது.

(iii) 2015 நவெம்பர் ஆந் திகதியன்று நிதி அமைச்சர் சமர்ப்பித்த வரவு, செலவுத் திட்ட முன்மொழிதல்களுக்கு அமைய விசேட பணிகளுக்கான வேன்களுக்கு 150 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்ட சுங்கத் தீர்வைக் கொடுப்பனவைப் புறக்கணிப்பதற்கு இறக்குமதியாளர்கள் 2015 நவெம்பர் 22 ஆந் திகதியின் பின்னர் இலங்கை சுங்க வளாகத்தில் பிரசன்னமாகி 23 வேன்களுக்கு முன்னைய ஒரு திகதியைக் குறிப்பிட்டுத் தயாரிக்கப்பட்ட சுங்கக் குறிப்பை சுங்க கணனி முறைமையில் உள்ளடக்கி ஏறக்குறைய ரூபா 129,986,739 சுங்கத் தீர்வை இழப்பிற்குக் காரணமாயினர் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) பண்டங்களைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தும் மூல நோக்கத்துடன் குறைந்த சுங்கத் தீர்வையைச் செலுத்தி இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை பயணிகளைக் கொண்டு செல்லும் சுகபோக வாகனமாக மாற்றமடையச் செய்ததன் மூலம் பெருமளவு சுங்கத் தீர்வை இழப்பு ஏற்படுவது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவ்வாறாக 26 வாகனங்களில் இழப்பிற்குள்ளான வரி வருமானம் ஏறக்குறைய ரூபா 124,176,870 ஆகும். இவ்வாகனங்கள் சம்பந்தமாக 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வது சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்குரிய விசேட பொறுப்பாகும் என அவதானிக்கப்பட்டது.

(இ) சுங்கக் குறிப்பு இலக்கம் CBMVI 2065 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட டபள் கெப் வாகனமாக அவதானிக்கப்பட்ட டிபென்டர் வாகனத்திற்கு சிங்கள் கெப் வாகனத்திற்குரிய குறைந்த சுங்கத் தீர்வை கொடுப்பனவு செய்யப்பட்டு சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டமையால் ஏறக்குறைய ரூபா 3,469,722 சுங்க வரி வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.

(ஈ) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மோட்டார் கார் ஒன்று (ஸ்டேஷன் வெகன்) சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவ்வாகனம் சிங்கள் கெப் வாகனத்திற்குரிய 8704-21-51 ஆம் இலக்கத்தின் கீழ் குறைச்த சுங்கத் தீர்வையுடன் விடுவிக்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, ஏறக்குறைய ரூபா 10,468,579 சுங்கத் தீர்வை அவ்வாகனம் தொடர்பாக இழப்பிற்குள்ளான்மை அவதானிக்கப்பட்டது.

### 3.18 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சுங்கத் திணைக்களக் கட்டிட அலங்காரத்திற்கு ரூபா 9,133,100 செலவழித்து 311 மலர்ச்செடிக் கொள்கலன்கள் கொள்வனவு செய்யப்பட்டபோதும், நேரடிப் பரிசோதனையின் போது அவற்றில் 5 குறைந்திருந்தமை தெரிய வந்தது.

### 3.19 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறக்கூடியதாகவிருந்த தகவல்களின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் புகையிலைக் கம்பனி ஒன்றினால் 3,965 மில்லியன் சிகரட் கூறுகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. அரசு அதற்கென ரூபா 81,155 மில்லியன் உற்பத்தி வரியைப் பெற்றிருந்தது. அக்கம்பனியின் வருடாந்த அறிக்கைப் படி சிகரட்களது கையிருப்பு வைத்திருக்கப்படும் காலம் 04 நாட்களாகும். 2015 ஆம் ஆண்டை மாத்திரம் கணக்கிற் கொள்ளுமிடத்து ஒரே தடவையில் வைத்திருக்கக்கூடிய கையிருப்பு ஏறக்குறைய 43.45 மில்லியன் கூறுகளாகும். எனினும், கண்டியிலும் கொட்டாஞ்சேனையிலும் கம்பனி 02 களஞ்சியங்களில் 296 மில்லியன் கூறுகளை வைத்திருந்தது. இதனால் வைத்திருக்கக்கூடிய காலத்தில் கிட்டத்தட்ட 253 மில்லியன் கூறுகள் அதிகமாக இருந்தது அவதானிக்கப்பட்டத. எனினும், அரசாங்கம் சிகரட் வரியை அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் களஞ்சியங்களிலும் பிரதேச முகவர்களிடமும் மொத்த விற்பனையாளர்களிடமும் இருக்கும் சிகரட் கையிருப்புகளுக்கு இலங்கை சுங்கம் உற்பத்தி வரியை அறவிட்டிருக்கவில்லை.

அரசாங்கம் 2014, 2015 ஆம் ஆண்டுகளில் சிகரட் வரியை முறையே ரூபா 5 மில்லியன் மற்றும் ரூபா 2.14 மில்லியன் என்பவற்றால் அதிகரித்திருந்தது. அக்கம்பனியினது பிரதேசக் களஞ்சியங்கள் இரண்டில் மாத்திரம் உயரளவுக் கையிருப்பு இருந்திருக்குமாயின் 2014, 2015 ஆம் ஆண்டுகளில் அரசாங்கம் ரூபா 1,480 மில்லியன் மற்றும் ரூபா 633 மில்லியன் என மேலதிக வரியைப் பெற்றிருக்கலாம். 1990 முதல் 2015 வரை 36 சந்தர்ப்பங்களில் வரி விகிதம் திருத்தஞ் செய்யப்பட்டபோதும், களஞ்சியக் கையிருப்புகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறக்குமதிப் பொருள் பரிசீலனை தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் சுங்கம் பதிவு செய்திருந்த 185, 683 தொகையில் இறக்குமதி பொருட்கள் அடங்கிய பூரண கொள்கலன்கள் 410, 153 ஆகும். அக்கொள்கலன்களில் 80.42 சதவீதம் அதாவது 329,864 இறக்குமதிப் பொருட்களை (Domestic use) உள்ளடக்கியனவாகும். ஏனையவை வரிச்சலுகை, பிணைமுறி, முதலீட்டுச்சபை நிறுவனங்கள் தொடர்பான இறக்குமதிப் பொருட்களைக் கொண்ட கொள்கலன்களாகும்.

(ii) வரி செலுத்தும் விதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களில் (Domestic Use) 212,200 கொள்கலன்கள் அதாவது 64.33 சதவீதம் இலகு விடுவித்தலின் (Amber Channel) கீழும் 99,012 கொல்களன்கள் அல்லது 27.28 சதவீதம் இறக்குமதியாளரது இடங்களிலும் 4.69 சதவீதமான 15,457 கொள்கலன்கள் பரிசீலிக்கப்படாமலும் விடுவிக்கப்பட்டிருந்தன. 10,097

கொள்கலன்கள் அல்லது 3.06 சதவீதம் விரிவான பரிசீலனையின் (Detailed Channel) கீழும் 0.39 சதவிதமான 1,293 கொள்கலன்கள் அதிகூடிய கவனப் பரிசீலனையின் கீழும் (High Risk Channel) 0.17 சதவீதமான 554 கொள்கலன்கள் (Red Channel) அதாவது கவனமான பரிசீலனையின் கீழும் விடுவிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய, 3.62 சதவீதமான 11,944 கொள்கலன்கள் மாத்திரம் முறையான பரிசீலனைக்குள்ளாகி 96.38 சதவீதம் பரிசீலிக்கப்படாது விடுவிக்கப்பட்டுமிருந்தன. இலங்கை சுங்கத்தில் நிரந்தரமாகவே நடைபெறும் பின்வரும் விதத்திலான பிழைகளை வெளிப்படுத்தவும் அதன் மூலம் அரசிற்கு ஏற்படும் வரி இழப்பைக் குறைப்பதற்கும் தற்போதைய நடைமுறைகளால் இயலவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

- சட்டவிரோத இறக்குமதிகள் ஏற்படுதல்
- குறிப்பிடப்பட்டவற்றிற்கு அதிகமாக கூடியஅளவு பொருட்கள் இறக்குமதி செய்யப்படல்
- குறித்தவற்றிற்கும் புறம்பான பொருட்களை இறக்குமதி செய்தல்.
- பிழையான வகைப்படுத்தலைக் குறிப்பிட்டிருந்தமை
- விலை குறைவாக மதிப்பிடப்பட்டு இறக்குமதிகளை மேற்கொள்ளுதல்

அதற்கமைய, மேற்படி பிழைகளைக் கண்டுகொள்ளக் கூடியவாறு தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகள் அமைவது அவசியம் எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், உத்தியோகத்தர்கள் பரிசீலனையிடும் மட்டுப்படுத்தப்பட்ட கொள்கலன்களினது அளவும் வேறு உள்ளகப் பரிசீலனைகளுக்கு முறையாக உட்டுபடுத்தப்படும் முகாமைத்துவ நடைமுறையும் இல்லாதிருப்பதும் அவதானிக்கப்பட்டது.

(இ) சுங்கப் பரிசீலனைத் தன்மையைத் தீர்மானித்தல், ஸ்கிரீனிங் (Screening) பிரிவுக்குரிய பிரதிப் பணிப்பாளரால் நடைபெறுகின்றது. அங்கு முறையான நடைமுறைகள் அறிமுகம் செய்யப்பட்டு இருக்கவில்லை. உத்தியோகத்தர்களது அனுபவம் மற்றும் இறக்குமதியாளரின் தகவல்களுக்கு ஏற்ப முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பிழையைக் கண்டு பிடிப்பதற்கு ஸ்கிரீனிங் பிரிவில் தகவல் முறைமை இருக்கவில்லை. ஆகவே, உத்தியோகத்தர்களது தற்றுணிபின் மீது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலங்கையில் இறக்குமதியாகும் வாகனங்களுக்கான வெளிநாட்டுச் சந்தை விலையைக் குறைத்துக் கூறி இறக்குமதியாளர் மோசடி மேற்கொள்வதைத் தவிர்ப்பதற்கு 2014 ஏப்ரல் 07 அன்று நிதி அமைச்சர் 18.57/03 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வரி அறவிடலுக்கான தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தைப் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைத்திருந்தார். அவர் குழு ஒன்றை நியமித்திருந்தார். குழுவின் செயற்பாட்டில் சில குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. அவை பின்வருமாறு.

(i) சுங்கம் பணிப்பாளர் நாயகத்தால் அமைக்கப்பட்ட குழுவில் இரு உத்தியோகத்தர்களே இருந்தனர்.

(ii) குறித்த குழு விலை மாற்றங்கள் மற்றும் விலை மதிப்பீட்டுக் குழு தீர்மானிக்கும் பெறுமதியை பணிப்பாளர் நாயகமோ அல்லது வேறு சுயாதீன நபர்களோ பகுப்பாய்வு செய்யவில்லை.

(iii) வர்த்தமானியின் பிரகாரம் உற்பத்தியாளரது விலை அல்லது சந்தை விலை இரண்டிலும் எது கூடியதோ அதன் அடிப்படையில் வரியைத் தீர்மானிக்காது போனமை.

(iv) வாகன இறக்குமதி முகவர்களது கோரிக்கைப் பிரகாரம் பெறுமதியைக் குறைப்பதும் இறக்குமதியாளர்களுக்குச் சாதகமாக வாகனத்தின் வரியைத் தீர்மானிப்பதும்

(v) உப மாதிரிகளைக் கொண்ட வாகனங்களுக்கு குறைந்த வரியைத் தீர்மானித்தலும் உப மாதிரிகளுக்கு வெவ்வேறு விலைகளை நியமித்தலும்

(vi) உற்பத்தியாளரின் விலையைப் பொருத்து பொருத்தமற்ற தரகை வழங்கி விலைக் குறைப்பை மேற்கொள்ளுதல்.

(vii) வாகனத்தின் சுங்க வரியைத் தீர்மானிக்கையில் வெளிநாட்டுச் சந்தை விலைகளை சுங்கக் குழு கவனிக்காமை

(viii) இறக்குமதி செய்யப்படும் வாகனங்களைக் கணிப்பீடு செய்யாமை.

(ix) அந்நியச் செலாவணி மாற்றங்களால் வாகன மதிப்பீட்டுப் பெறுமதியில் ஏற்படும் தாக்கங்களைக் கருத்திற் கொண்டு விலை மாற்றம் செய்யாமை

(உ) 2015 ஏப்ரல் 25 ஆந் திகதிய 1526 ஆம் இலக்க சுங்கக் குறிப்பின் மூலம் இறக்குமதியாகும் வாகனங்கள் மோட்டார் வாகனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படும் போது அவை பயன்படுத்தப்பட்டனவாக இருப்பது அவதானிக்கப்பட்டது. இதனை உறுதி செய்யுமாறு மோட்டார் வாகனப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பரிசீலனையின் போது அது ஐக்கிய இராச்சியத்தில் YH14/VCZ இலக்கத்தில் பதிவாகி பின்னர் இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. அதற்கமைய இலங்கை சுங்கம் வரி அறவீடு தொடர்பாகப் பொருட்களின் பரிசீலனையை முறையாக மேற்கொள்ளாமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2012 மார்ச் 30 ஆந் திகதிய 1751/27 இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் சுங்கக் குறிப்பு இலக்கம் 8707.10 இன் கீழ் இறக்குமதி செய்தவாகனத் தளங்களுக்கு (Body Shell) சீ.ஐ.எவ்(CIF) பெறுமதியில் 15 சதவீதம் அல்லது ஒரு கூறுக்கு ரூபா 291,000 என இந்த இரண்டில் எது கூடியதோ அதனைச் சுங்க வரியாக அறவிடுமாறு பணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான 2032 பகுதிகளுக்கு கூடிய வரியை சுங்கம் அறவிடாமையால் ரூபா 566,901,545 வரி இழப்பு அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(எ) இலங்கையில் இறக்குமதியாகும் பொருட்கள் பல்வேறு காரணங்களால் சாதாரணவரி நடைமுறைகளுக்கு உட்படாத சந்தர்ப்பங்களில் தேவையான வசதிகளும் மேற்பார்வையும் இலங்கை சுங்கத்தின் D பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றது. அப்பிரிவின் உள்ளகக் கட்டுப்பாட்டில் பின்வரும் நலிவுகள் தென்பட்டன.

(i) 2014 முதல் பிரிவின் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படவில்லை.

(ii) இறக்குமதியாளர் சமர்ப்பிக்கும் வங்கிப் பிணைமுறியும் கம்பனியின் பிணை வைப்பும் தொடர்பான பதிவுப் பரிசீலனையும் நலிவடைந்திருந்தன.

(iii) வங்கிப் பிணைமுறியும் கம்பனி பிணைமுறியும் தொடர்பான தகவல்கள் ஆசிக்குடா கனணி முறைமையினூடாக இருக்கவில்லை. இதனால் குறிப்பிடப்பட்ட பதிவேடுகளில் மோசடியான பதிவுகளை உள்ளடக்கி வரி செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு இருந்தது.

(iv) சோழம், சீமெந்து, பெட்றோல் போன்ற (Bulk Cargo) இறக்குமதிப் பொருட்கள் பரிசீலனைக்குள்ளாகவில்லை.

(v) இலங்கை சுங்கத்தின் D பிரிவால் பேணப்படும் ஏடுகள் மற்றும் பதிவேடுகள் தொழில்நுட்ப ரீதியாக நடைபெறாதும் செயற்பாடு, பரிசீலனை என்பன நலிவடைந்தும் இருந்தன.

(vi) அப்பிரிவின் வருகை, செல்கைப் பதிவேடு, மேலதிக நேர விடுமுறைப் பதிவேடு என்பவற்றில் நலிவுகள் இருந்தன.

(ஏ) சுங்கவரியாகவும் கட்டணமாகவும் ரூபா 17 மில்லியனுக்கு அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்படவேண்டிய பொருட்கள் அடங்கிய கொல்கலன்களுக்கு இறக்குமதியாளரிடமிருந்து ரூபா 549,622 வரி மாத்திரமே பெறப்பட்டிருந்தது. பின்னர், அதனை வெளி இடம் ஒன்றில் கைப்பற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பான அவதானிப்புகள் வருமாறு.

(i) குறித்த கொள்கலன் 2016 சனவரி 15 அன்று இலங்கையில் இறக்குமதியாகி இருந்தது. இறக்குமதியாவதற்கு 09 நாட்களுக்கு முன்னர் அதனை விசாரிப்பதற்கு இலங்கை சுங்கத்தின் வருமான மேற்பார்வைப் பிரிவு முடிவு செய்தது. இறக்குமதியாளரின் மேன்முறையீட்டையடுத்து விசாரணை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

(ii) விடுவிப்புப் பிரிவின் பரிசீலனையின் பின்னர் குறித்த கொள்கலன்கள் ஒறுகொடவத்த கிறே லைன் 1 பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டது. பரிசிலனையின்றி அது விடுவிகக்ப்பட்டிருந்தது.

(iii) பெருமளவு சுங்கவரி மோசடி செய்வதற்கு இறக்குமதியாளருக்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டது தொடர்பாக சுங்க உத்தியோகத்தர்களுக்கு எதிராக சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 137 ஆம் பிரிவின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஐ) பொருள் வகைப்படுத்தல் குறிப்பு 1006 ஆம் இலக்கத்தின் பிரகாரம் 01 கிலோகிறாம் இறக்குமதி அரிசிக்கு அறவிடப்படும் விசேட வர்த்தக வரியான (ரூபா1) அகற்றப்பட்டு 2015 சனவரி 22 அன்று ரூபா 20 2015 மார்ச் 25 அன்று ரூபா 40 என விசேட வர்த்தகப் பொருள் வரி விதிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாக வரி அதிகரிக்கப்பட்டிருக்க 2015 சனவரி 22 ஒரு ரூபா வரி மாத்திரமே 10 இறக்குமதியாளர்களிடமிருந்து சுங்கத்தால் அறவிடப்பட்டதால் ரூபா 55,296,000 அறவிடப்பட முடியவில்லை விசேட வரியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 79,440,000 அரச வரி பிற நபர்களிடம் இருப்பதும் அதனை துரிதமாகச் சேகரிக்கப் போதிய நடவடிக்கை எடுக்காமையும் அவதானிக்கப்பட்டது.

(ஒ) 2015 பெப்ரவரி 24 அன்று தனியார் நிறுவனம் அன்று 52,000 கிலோ கிறாம் அரிசியை இறக்குமதி செய்து ரூபா 1,040,000 விசேட வரியாகச் செலுத்த வேண்டியிருந்தது. அது அறவிடப்படாது வங்கிப் பிணைமுறி மீது அரிசிக் கையிருப்பை விடுவிப்பதற்கு அவகாசமளிக்கப்பட்டிருந்தது.

(ஓ) இலங்கை சுங்கம் பறிமுதல் செய்பவற்றை சுங்கத்தின் மத்திய பிரிவு மூலம் கேள்விகளைக் கோரி விற்பனை செய்வது தற்போதைய நடைமுறையாகும். 45 சந்தர்ப்பங்களில் இதன் மூலம் ரூபா 546,608,735 சேகரிக்கப்பட்டிருந்தது. இவ் விற்பனைச் செயற்பாடு இலங்கை சுங்கத்தால் 1984 மார்ச் 30 ஆந் திகதிய 291 ஆம் இலக்க வர்த்தமானியால் வழங்கப்பட்ட PL46 உள்ளகச் சுற்றறிக்கை மூலம் ஆலோசனைக்குள்ளான போதும், பொருள்விற்பனை முறையாகவும் தெளிவாகவும் இல்லாதிருந்தமை முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை மூலமும் கணக்காய்வு ஐய வினாக்களின் மூலமும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. இக் குறைபாடுகள் 2016 ஏப்ரல் 30 அன்றும் திருத்தப்படவில்லை. மீளாய்வாண்டின்போதும் மேலும் அவதானிக்கப்பட்ட சில குறைபாடுகள் பின்வருமாறு.

(i) விற்பனையின்போது தெரிவு செய்யப்படும் கொள்வனவாளர்களிடமிருந்து கொள்வனவு விலையின் 50 சதவீதம் குறித்த தினத்திலேயே வைப்பாகப் பெறப்பட வேண்டுமாயின் பிரசித்த ஏல விற்பனையின் போது விற்பனை விலையில் 10 சதவீதம் வைப்பாகப் பெறப்பட வேண்டும். எனினும், 2015 ஆம் ஆண்டில் 45 சந்தர்ப்பங்களில் சேகரித்த ரூபா 546,608,735 விற்பனை தொடர்பாக இது கடைப்பிடிக்கப்படவில்லை.

(ii) ஏற்பாடுகளின் பிரகாரம் சகல விற்பனைகளுக்கும் 03 நாட்களுக்குள் கொள்வனவாளரால் பணம் செலுத்தப்படாவிட்டால் வைப்புப்பணம் பறிமுதலாகும். 13 பொருட்களுக்கு 40 முதல் 167 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் புலனாகியது.

(iii) கூடிய விலையுடைய பொருட்களுக்கு கூடிய பட்சம் ரூபா 100,000 திருப்பிச் செலுத்தப்படும் வைப்புப் பெறப்பட வேண்டும். 92 சந்தர்ப்பங்களில் அத்தொகையை பறிமுதல் செய்வதற்கு இடமளித்து பொருட்களுக்கான பெறுமதியைக் குறைப்பதற்கு முயற்சித்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட ரூபா 3,800,000 தொகையிலும் கூடுதலாக ரூபா 22,152,347 அதிகமாக விலை குறைக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஔ) 2014 சனவரி 02 ஆந் திகதிய சிற்றுண்டிச் சாலைக்குழுக் கூட்டத்தில் இரண்டாவது கேள்விக்கு நீர், மின்சாரம், சிற்றுண்டிச்சாலை உணவு என்பவற்றிற்கு விலையைச் சேர்க்குமாறு சிற்றுண்டிச்சாலைக் குழுவால் சேவை வழங்கல் பணிப்பாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டபோதும் அவ்வாறு நடைபெறவில்லை.

(க) வெளிநாட்டுச் செயலமர்வுகளில் பங்குபற்றிய மூன்று பேருக்கு வெளிநாடு சென்றிருந்த காலப்பகுதிக்கென ரூபா 13,807 மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது.

## 3.20 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 341 | 320 | 21 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 1152 | 757 | 395 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 979 | 610 | 369 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 488 | 326 | 177 | 15 |
| | மொத்தம் | 2960 | 2013 | 962 | 15 |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கைச் சுங்கத்தின் அங்கீகரித்த பதவியணி 2960 ஆகும். உள்ளவாறான பதவியணி 2013 ஆகும். அதில் ஏறக்குறைய 1007 சுங்க நேரடி நடவடிக்கை உத்தியோகத்தர்களும் இருந்தனர்.

(ஆ) இறக்குமதிப் பொருட்களால் குறிப்பிடத்தக்க அரச வருவாய் பெறப்படுவதுடன் பெருமளவு உத்தியோகத்தர்களைப் பரிசீலனை நடவடிக்கைகளில் இலங்கை சுங்கப் பணியிலமர்த்த வேண்டியிருந்தது. இறக்குமதி வரி சரியாகச் செலுத்தப்பட்டதா என்பதை உறுதி செய்வதற்கு கொள்கலன்களைப் பரிசீலனை செய்வது முன்னுரிமைப் பொறுப்பாகும். 2015 ஆம் ஆண்டில் இறக்குமதிப் பொருட்கள்

அடங்கிய 309,947 கொள்கலன்கள் பரிசீலிக்கப்படுவதற்கு ஒறுகொடவத்தை நிலையத்தில் 29 பேர் மாத்திரமே இருந்தனர். அதற்கமைய, ஒரு உத்தியோகத்தர் நாளொன்றிற்கு ஏறக்குறைய 29 கொள்கலன்களைப் பரிசீலிக்க வேண்டுமாயினும், அது நடைமுறைச் சாத்தியமற்றதால் பரிசீலனை முறைப்படி அமையவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) அரச வருவாயில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு பெறப்படாத சில பிரிவுகளுக்குக் கூடிய எண்ணிக்கையான உத்தியோகத்தர் அமர்த்தப்பட்ட சந்தாப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம், மத்தள சர்வதேச விமான நிலையத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த வருவாய் ரூபா 140,713 ஆக இருக்கையில் 15 உத்தியோகத்தர்கள் பணியிலமர்த்தப்பட்டிருந்தனர். 641 உத்தியோகத்தர்கள் நிவாரண அலுவலகங்களில் இருந்த போதும் ஒவ்வொருவரதும் பணி என்னவென்பது இனங்காணப்படவில்லை.

(ஈ) இலங்கை சுங்கத்தின் ஒவ்வொரு பிரிவிலும் உள்ளவர்களது எண்ணிக்கை அடங்கிய பதிவேடு மனிதவள முகாமைத்துவப் பிரிவிலோ அல்லது நிர்வாகக் கிளையிலோ பேணப்படவில்லை. ஒவ்வொரு பிரிவினது தேவைக்கும் ஏற்ப உத்தியோகத்தர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். இதனை உறுதிசெய்வதற்குப் போதியளவு தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.